செய்தி வெளியீடு எண் 429 **செய்தி வெளியீடு** **11.07.2007**

**மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் நெடுஞ்சாலைத் துறைப் பணிகளின் முன்னேற்றம் குறித்து இன்று (11.07.2007) மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர், துறைச் செயலர் மற்றும் பொறியாளர்களுடன் ஆய்வு செய்தார். நடைபெற்று வரும் சாலைப் பணிகள் மற்றும் புதிதாக ஒப்புதல் தரப்பட்டுள்ள 6530 கிலோமீட்டர் நீள சாலைப் பணிகளையும், 12 மேம்பாலங்கள், 175 பெரிய மற்றும் சிறிய பிற பாலங்களையும் துரிதப்படுத்தி முடிப்பதென்றும்;**

**மேலும், நடப்பாண்டில் அரசு திட்டப் பணிகளுக்கு ஒதுக்கியுள்ள ரூ.2653 கோடியை முழுமையாகப் பயன்படுத்தி சாலை மேம்பாட்டுப் பணிகளை முடிப்பதென்றும்;**

**சாலைகளைப் பராமரிக்கும் பணிகளுக்காக நெடுஞ்சாலைத் துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ள ரூ.723 கோடியைப் பயன்படுத்தி 8200 கிலோமீட்டர் சாலைகளைப் புதுப்பிக்க நடவடிக்கை எடுப்பதென்றும் முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.**

**மேலும், தமிழகத்திலுள்ள மாநிலச் சாலைகள் அனைத்தையும் இரு வழித்தடங்களாக அகலப்படுத்துவது என்ற அரசின் கொள்கை அடிப்படையில் கடந்த ஓராண்டில் 1518 கிலோமீட்டர் நீளச் சாலைகள் அகலப்படுத்தி மேம்படுத்தப்பட்டுள்ளன. அதேபோல, சுமார் 1000 கிலோமீட்டர் மாநிலச் சாலைகளை அகலப்படுத்தவும், 925 கிலோமீட்டர் மாவட்ட முக்கியச் சாலைகள் மற்றும் 1367 கிலோமீட்டர் மாவட்ட இதர சாலைகளை மேம்படுத்தவும், 42 புதிய பாலங்களைக் கட்டுவதற்கும், ஒருங்கிணைந்த சாலை உள் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.729 கோடி அனுமதித்து மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உத்தரவு வழங்கினார். இப்பணிகளையும் துரிதமாகவும், தரமாகவும் முடிக்க நடவடிக்கை எடுப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.**

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை 9.